# சிவகங்கை நகராட்சி

## அவசரக் கூட்டம்

2023ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 26ம் நாள் சுபகிருது வருடம் புரட்டாசி 09ம் நாள் செவ்வாய் கிழமை முற்பகல் 12.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் அவசரக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்கண்ட பொருள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். உறுப்பினர்கள் அனைவரும் வருகை தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
சிவகங்கை நகராட்சி

1. சிவகங்கை நகராட்சி வார்டு எண்:21, செக்கடி ஊரணி நடைபாதை பூங்கா சீரிய முறையில் பாதுகாக்கவும், தூய்மையாக பராமரிக்கவும் ஆனந்தம் மகளிர் சுய உதவிக்குழு, சிவகங்கை என்பவருக்கு ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மன்றப்பொருள் அனுமதிக்கு.

சிவகங்கை நகராட்சி வார்டு எண்:21, பிள்ளைவயல் காளியம்மன் கோவில் ஆர்ச் அருகில் தொண்டி ரோட்டில் அமைக்கப்பட்டுள்ள பொதுக் கழிப்பிடம் சீரிய முறையில் பாதுகாக்கவும், தூய்மையாக பராமரிக்கவும் ஆனந்தம் தமிழ் மகளிர் சுய உதவிக்குழு, சிவகங்கை என்பவருக்கு ஒப்படைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. மன்றப்பொருள் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:</u>

1.உரிய விதி மற்றும் வழிமுறைகளை பின்பற்றி செயல்பட மன்றம்

அனுமதிக்கலாம்.

2.அவசர அவசியம் கருதி மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர்

அவர்களின் முன் அனுமதி பெற்றதை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மானஎண்: 176**
**அனுமதிக்கப்பட்டது.**

2. சிவகங்கை நகராட்சி–பொதுசுகாதாரம்–இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் டெங்கு ஒழிப்பு பணிகள் மிகத் தீவிரமாக 49 எண்ணிக்கையிலான டெங்கு தடுப்பு பணியாளர்களைக் கொண்டு 14771 வீடுகளில் கொசுப்புழு ஒழிப்பு பணிகள் (ALL WORK) நடைபெற்று வருகிறது, இந்நிலையில் முதிர்ந்த கொசுக்களை ஒழிப்பதற்கான Fogging Machine (புகை பரப்பி இயந்திரம்) முற்றிலும் இயக்க

முடியாத நிலையில் உள்ளது, எனவே இனிவரும் காலங்கள் மழைக்காலங்கள் என்பதால் , டெங்கு காய்ச்சலை கட்டுப்படுத்தும் பொருட்டு முதிர் கொசுக்களை ஒழித்திட கீழ்க்கண்ட இயந்திரங்கள் கொள்முதல் செய்ய நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருள் | ஒன்றின் விலை |
|---|---|---|---|
| 1. | S.N.ENTERPRISES<br>Plot No.6. Door No.1G<br>Rajaji Avenue,<br>Valasaravakkam,<br>Chennai-600 087 | Pulse Fogging Machine | ரூ. 73,100 |
| | | Hand Fogging Machine | ரூ. 24,200 |
| | | Hand Fogging Machine cylinder | ரூ. 335 |
| 2. | SYSTEMS ENGINEERING<br>243-54, Mettu Street,<br>Old Perungalathur,<br>Chennai - 600 063 | Pulse Fogging Machine | ரூ. 72,600 |
| | | Hand Fogging Machine | ரூ. 23,520 |
| | | Hand Fogging Machine cylinder | ரூ. 330 |

<u>அலுவலகக்குறிப்பு</u>

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய SYSTEMS ENGINEERING, 243-54, Mettu Street, Old Perungalathur, Chennai - 600 063 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மானஎண்: 177**

**அனுமதிக்கப்பட்டது.**

3. சிவகங்கை நகராட்சி-பொதுசுகாதாரம்-இந்நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் டெங்கு ஒழிப்பு பணிகள் மிகத் தீவிரமாக 49 எண்ணிக்கையிலான டெங்கு தடுப்பு பணியாளர்களைக் கொண்டு டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன இந்நிலையில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளள கொசுப்புழுகளை அழிக்க பயன்படத்தப்படும் அபேட் (Temephos) மருந்து மற்றும் முதிர் கொசுக்களை அழிக்க புகை மருந்தாக பயன்படுத்தப்டும் பைரித்ரம் குறைந்த அளவு மட்டுமே கையிருப்பில் உள்ளதால், எதிர்வரும் வடகிழக்கு பருவமழையால் டெங்கு காய்ச்சல் பரவ வாய்ப்புள்ளதால், முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர் ஆய்வுக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டதற்கினங்க டெங்கு காய்ச்சல் தடுப்பிற்கான பின்வரும் மருந்துகளை கொள்முதல் செய்திட நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதில், கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | பொருள் | லிட்டர் ஒன்றிற்க்கு விலை |
|---|---|---|---|
| 1. | MSMVM AGENCIES,<br>268, EAST STREET,<br>PIRANMALAI,<br>SIVAGANGAI-630502 | பைரித்ரம் (2% Extract) | ரூ. 1,095/- |
| | | அபேட் (டெமிபாஸ்) | ரூ. 620/- |
| 2. | SHRI RAMLAKSHMI<br>TRADERS AND AGENCIES,<br>1A/10, MAIN ROAD,<br>MARIAMMAN KOVILPATTI,<br>THENI-625 531 | பைரித்ரம் (2% Extract) | ரூ. 1,120/- |
| | | அபேட் (டெமிபாஸ்) | ரூ. 630/- |

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி வழங்கிய MSMVM AGENCIES, 268, EAST STREET, PIRANMALAI, SIVAGANGAI-630502 என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று விநியோக உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மானஎண்: 178**
**அனுமதிக்கப்பட்டது.**

நகர்மன்றத்தலைவர்,
சிவகங்கை நகராட்சி